## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை

## அசல் வழக்கு எண். 112/2017

PW1 – திரு. சேசுராஜ் நாள். 16.02.2024

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. கற்காத்தகுடி கிராமத்தில் உள்ள எனது தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட மொத்த சொத்துக்களுக்கு உள்ள பட்டா யார் பெயரில் இருக்கிறது என்றால் எனது பெயரிலும், எனது தகப்பனார் பெயரிலும் இருந்து வருகிறது. எனது தகப்பனார் சொத்தில் எனது சகோதரிகளுக்கு பங்கு உள்ளதா என்றால் சுமார் 2013–2014 காலகட்டத்தில் பெறப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் என் சகோதரிகளுக்கு பாத்தியம் இல்லை. 2013–2014 காலகட்டத்தில் பகரப்பட்ட தீர்ப்பின் அடிப்படையில் எனது சகோதரிகளுக்கு பாத்தியம் இல்லை என்று சொல்வது பொய் என்றும் அவ்வாறு தீர்ப்பு கொடுக்கப்பட்டிருந்தால் அவற்றை எனது பிராதில் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல.

2. தாவா சொத்துக்கான பட்டா 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்டிருப்பதை எதிர்த்து வருவாய்த்துறையில் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் எடுக்கவில்லை அதற்கு பதிலாக இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லாததால் தான் 1ம் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட பட்டாவை வருவாய்த்துறையில் ஆட்சேபனை செய்யவில்லை என்று

சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கான பட்டா ஏற்பட்ட விவரம் ஏற்பட்ட காலத்திலேயே எனக்கு தெரியும் என்றும் வழக்கிற்காக 2017ம் ஆண்டு தான் தெரிய வந்தது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. திருச்சி – இராமேஸ்வரம் தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணியானது 4 ஆண்டு காலம் நடைபெற்றது என்றால் அதைப் பற்றி தெரியாது. மேற்படி சாலை விரிவாக்க பணி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது என்றால் அதைப் பற்றி தெரியாது. கற்காத்தகுடி கிராமத்தில் நெடுஞ்சாலை விரிவாக்க பணி செய்யும் பொழுது நான் கற்காத்தகுடி கிராமத்திற்கு வந்துள்ளேனா என்றால் வந்துள்ளேன் எப்பொழுது என ஞாபகமில்லை. மேற்படி கற்காத்தகுடி கிராமத்திற்கு வந்தபோது தாவா சொத்தில் எவ்வளவு அளவுகள் நெடுஞ்சாலைக்கு எடுக்கப்பட்டது என்றும் அதற்கான நஷ்ட ஈடு எவ்வளவு என்றும் மற்றும் யாருக்கு நஷ்ட ஈடு வழங்கப்பட்டது போன்ற விவரங்களை நான் தெரிந்து கொண்டேனா என்றால் கற்காத்தகுடி கிராமத்தில் எனது தந்தை அப்பொழுது இருந்து வந்தார் அவர் வாங்கியிருப்பார் என நான் இருந்து வந்தேன்.

4. மேற்படி நஷ்ட ஈடு பெற்ற விவரத்தை எனது தகப்பானரிடம் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. எனது தகப்பனார் எவ்வாறு இறந்தார் என்றால் சாலை விபத்தில். எனது தகப்பனாரின் இறப்பு சான்றிதழ் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. தேசிய நெடுஞ்சாலை விரிவாக்க பணியின் போது எனது தகப்பனார் உயிருடன் இருந்தார் என சொல்வது பொய் என்றும் மேற்படி காலகட்டத்தில் எனது தகப்பனார் இறந்து விட்டார் என்று சொன்னால் சரியல்ல.

5. தாவா சொத்தில் எனக்கு எந்த உரிமையும் இல்லாததால் தான் தேசிய நெடுஞ்சாலைக்கு எவ்வளவு இடம் எடுக்கப்பட்டது யார் எவ்வளவு நஷ்ட ஈடு

வாங்கினார்கள் போன்ற விவரங்களை நான் தெரிந்து கொள்ளவில்லை என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு வடக்கு பக்கம் உள்ள இன்னாசிக்கு பாத்தியப்பட்ட சொத்தானது எனது தகப்பனாரும், இன்னாசியும் சேர்ந்து வாங்கப்பட்ட சொத்து என்றால் சரிதான் மேற்படி சொத்து பெரிய தகப்பனாரான இன்னாசிக்கு ஒதுக்கப்பட்டது.

6. தாவா சொத்திற்கு வடக்கு புறம் உள்ள சொத்தானது வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கிரைய பத்திரங்களில் கட்டுப்பட்ட மொத்த சொத்து என்றால் சரியல்ல மேற்படி வடபுறம் சொத்தானது பாதி சொத்து ஆகும். வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் கட்டுப்படுத்தப்பட்ட சொத்தானது தாவா சொத்திற்கு வடபுறம் உள்ளது என்றும் அது இன்னாசி பாகத்திற்கு மட்டும் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அந்தோணியம்மாள் வீடு கட்டியிருக்கும் சொத்து எவ்வளவு செண்ட் இருக்கும் என்றால் சுமார் 1.5 யிலிந்து 2 செண்ட் இருக்கும்.

7. தாவா சொத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள தார் சாலை கட்டமைப்பு பகுதிக்கும் அதற்கு மேற்கே உள்ள காணுக்கும் இடைப்பட்ட தூரம் 8 அடி இருக்கும் என்றால் சுமார் 10 அடி இருக்கும். கற்காத்தகுடி கிராமத்தில் குடிசை வீடுகள் எதுவும் இல்லை என்றால் சரிதான். கற்காத்தகுடி கிராமத்தில் குடிசை வீடுகள் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு தான் இருந்தது என்றால் சரியல்ல சுமார் 10 வருடங்களுக்கு முன்பு வரை குடிசை வீடுகள் இருந்தது. அந்தோணியம்மாளின் குடிசை வீடு 2005ம் ஆண்டு வரை இருந்ததா என்றால் 2010 வரை இருந்தது. மேற்படி குடிசை வீட்டில் தான் அந்தோணியம்மாளும் அவரது கணவரும் குடியிருந்து வந்தார்கள் என்றால் சரியல்ல கற்காத்தகுடி கிராமத்தில் நடுத் தெருவில் உள்ள வேறு ஒரு வீட்டில் குடியிருந்து வந்தனர்.

8. தாவா சொத்தில் உள்ள அந்தோணியம்மாள் வீட்டில் தான் அவரது கணவர் இறந்தார் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீட்டில் தான்

அந்தோணியம்மாளின் கணவர் இறந்தார் என்றும் வழக்கிற்காக தெரியாது என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 கட்டுப்பட்டுள்ள சொத்தில் எனக்கும் எனது தகப்பனாருக்கும் எந்த பாத்தியமும் இல்லை என்றும் எனது தகப்பனார் பாகத்திற்கு மேற்படி சொத்தை ஒதுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

9. வா.சா.ஆ.1 மற்றும் வா.சா.ஆ.2 ஆவணங்களில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் எனது தகப்பனார் பாகத்திற்கு ஒதுக்கட்டிருந்தால் மேற்படி ஆவணங்களின் அசல் எனது தகப்பனாரிடம் இருந்திருக்கும் என்றும் அவ்வாறு இல்லாததால் இவ்வழக்கில் சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என் தகப்பானருக்கு உரிமை இல்லாத தாவா சொத்தை எனது தகப்பானருக்கு ஒதுக்கப்ப்பட்டதாகவும் அதைத் தொடர்ந்து நானும், எனது தகப்பனாரும் பாகப்பிரிவினை செய்து கொண்டதாகவும் அந்த பாகப்பிரிவினையில் தாவா சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

10. நானும், எனது தகப்பனாரும் எனது தகப்பனாருக்குபாத்தியப்பட்ட சொத்துக்களை 22.04.1989 குடும்ப ஏற்பாடு செய்து கொண்டதாகவும் அது தொடர்பாக குடும்ப ஏற்பாடு ஆவணம் ஏற்படுத்திக் கொண்டதாகவும் மேற்படி ஆவணமானது என்னால் மோசடியாக ஏற்படுத்தப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கு பகுதியில் அந்தோணியம்மாள் 30 ஆண்டுகாலமாக குடியிருந்து வருகிறார் என்றால் சரியல்ல.

11. தாவா சொத்தில் ஆக மேல்புறம் 1.5 செண்ட் 1ம் பிரதிவாதியின் தகப்பனாருக்கு பூர்விக பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல மேற்படி சொத்தானது 07.09.1934 ம் தேதி 1ம் பிரதிவாதியின் தகப்பனாரான சவரிமுத்துவும் அவரது முதல் மனைவியும் கிரையம் பெற்ற சொத்தாகும்.

மேற்படி 1.5 செண்ட் நிலத்திற்கு கீழ்புறத்தில் உள்ள 3/4 செண்ட் நிலத்தை 1ம் பிரதிவாதி தகப்பானர், மைக்கேல் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கினார் என்றால் சரிதான் 3/4 செண்ட் நிலம் இல்லை கிழமேல் 10 தென்வடல் 35 ஆகும். மேற்படி 3/4 செண்ட் நிலத்திற்கும் கிழக்கே உள்ள 3/4 செண்ட் நிலமானது அந்தோணியம்மாளின் கணவர் குழந்தைச்சாமி பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

12. மேற்படி 3/4 செண்ட் நிலத்தில் குழந்தைச்சாமி வீடு கட்ட ஏற்பாடு செய்யும் போது தான் நெடுஞ் விரிவாக்க பணி தொடங்கப்பட்டது என்றும் அதனால் குழந்தைச்சாமி அவரது சொத்தில் வீடு கட்டாமல் தாவா சொத்தில் ஆக மேல்புறம் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. குழந்தைச்சாமிக்கு பிரதிவாதிகள் தாவா சொத்தில் ஆக மேல்புறத்தை விட்டுக் கொடுத்ததால் தான் தாவா சொத்தில் ஆக கீழ்புறத்தை குழந்தைச்சாமி பிரதிவாதிகளுக்கு வாய்மொழியாக விட்டுக் கொடுத்தார் என்றால் சரியல்ல. அதனால் தாவா மொத்த சொத்துக்களுமே பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

13. பிரதிவாதிகளின் பாத்தியத்தை ஊர்ஜிதம் செய்து 1ம் பிரதிவாதியின் பெயரில் நத்தம் பட்டா வழங்கப்பட்டது என்றால் சரியல்ல. கற்காத்தகுடி கிராமத்தில் நெடுஞ்சாலை ஒட்டியுள்ள சொத்துக்கள் 1 செண்ட் எவ்வளவு போகிறது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் மதிப்பு எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. வழக்கு தாக்கல் செய்யும் போது வழக்கறிஞரிடம் விவரம் யார் கூறினால் என்றால் நான் தான் கூறினேன். தாவா சொத்து மதிப்பு 1 செண்ட்க்கு ரூபாய். 4,00,000/– போகும் என்றும் வழக்கிற்காக தாவா சொத்தின் மதிப்பு தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல தாவா சொத்து மதிப்பு செண்ட்க்கு ரூபாய். 50,000/– கூட இருக்காது.

14. இவ்வழக்கில் நெடுஞ்சாலைத்துறையையும், அந்தோணியம்மாளையும் தரப்பினர்களாக சேர்க்காததால் அவசிய தரப்பினர்களை சேர்க்காத தோஷத்தால் இவ்வழக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தை 1ம் பிரதிவாதி சட்ட விதிகளுக்கு உட்பட்டு 2ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணமானது சட்டப்படி செல்லக்கூடியது என்றும் மேற்படி ஆவணத்தை ஆட்சேபனை செய்ய எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பாதிரியாராக பணி செய்து வருவதால் அவருக்காக 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல.